# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
## 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

TLS 3103 தொல்காப்பியம் பொருளதிகாரம்

நேரம்: 3 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

1. அ .அகத்திணையியல் நூற்பா வைப்புமுறை பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
   அ. அந்நூற்பாக்களை விளங்கிக்கொள்வதிலுள்ள பாட, உரை விளக்கச் சிக்கல்களை ஆராய்க.

2. "முதல் - கரு - உரி என்ற எண்ணக்கருவினூடாகத் தொல்காப்பியர் அகத்திணைப் பாடல்களுக்கான கவிதைக் கோட்பாட்டினை வகுத்துள்ளார்" ஆராய்க.

3. புறத்திணைகளாகக் கூறப்படுவன ஒவ்வொன்றும் அகத்திணை ஒவ்வொன்றினதும் புறமாகத் தொல்காப்பியர் கொள்ளும் முறைமை ஏற்புடைத்தானதா? விளக்குக.

4. தொல்காப்பியம் புறத்திணையியலிற் காஞ்சி பற்றிக் கூறும் ஆரம்ப வரைவிலக்கணத்திலிருந்து அதற்குரியதெனக் கூறப்படும் துறைகள் வேறுபடுமாற்றை விளக்குக.

5. தொல்காப்பியம் செய்யுளியல் குறிப்பிடும் அடிவரைவு அற்ற செய்யுட்கள் யாவை? விளக்குக.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.
   அ. திணைப் பெயர் - திணைநிலைப் பெயர்
   ஆ. மகட்பாற் காஞ்சி
   இ. உள்ளுறை உவமம்
   ஈ. புறத்திணை இலக்கிய மரபில் பாடாண்திணை பெறும் இடம்
   உ. மரபியலில் எடுத்துக் கூறப்படும் தமிழின் சொற்பயன்பாட்டு மரபு